**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**
**நாள்: 25.11.2025**
**அரசு தரப்பு சாட்சி** : 19 (LW14)

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கபாண்டியன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A1, A3, A4, A6, A7 ஆஜர். A2, A5 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழநரியன் கிராமத்தில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன் .வழக்கில் இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகளையும், ஆஜர் இல்லாத இரு எதிரிகளான சுரேஷ்குமார் மற்றும் சரத்குமார் ஆகியோர்களையும் எனக்குத் தெரியும். கடந்த 3 வருடத்திற்கு முன்பாக மாலை 03.30 லிருந்து 04.00 மணிக்குள் கீழகாக்காக்குளத்திலிருந்து வீரசோழன் கிராமத்திற்கு நானும் கருப்பையாவும், கருப்பையா கட்டிவரும் புதிய வீட்டிற்கு கல் பார்ப்பதற்காக சென்று, அட்வான்ஸ் தொகை கொடுத்துவிட்டு,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:41:45 +0530

காக்காகுளம் வந்தோம். கருப்பையா வீட்டிற்கு வந்தோம். நான் வீட்டிற்கு போவதற்காக கிளம்பினேன். கருப்பையாவும் வருவதாக சொல்லி என்னுடன் வந்தார். பின்னர் நாங்கள் இருவரும் எங்கள் வீட்டிற்கு போனோம். போகும் வழியில் சரக்கு வாங்கி இருவரும் சாப்பிட்டுவிட்டு போனோம். அதன்பிறகு நான் எனது அத்தை இறந்த காரியத்திற்காக சென்றுவிட்டேன். கருப்பையாவும் என் அண்ணனும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் மீண்டும் திரும்ப வீட்டிற்கு வந்து என் அண்ணனிடம் கருப்பையா எங்கே என கேட்டேன். அவர் கிளம்பிவிட்டதாக என்னிடம் சொன்னார். பின்னர் நான் சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டேன்.

மறுநாள் காலை 04.00 மணிக்கு என் தம்பி சௌந்தர்ராஜன் எனக்கு போன் செய்து சவாரிக்கு வண்டி எடுத்து கொண்டுபோக சொன்னார். நான் வண்டியை ஸ்டார்ட் செய்து கொண்டிருக்கும்போது மீண்டும் எனது தம்பி எனக்கு போன் செய்து, எங்கள் ஊர் பஸ் ஸ்டாண்டில் கருப்பையாவின் பைக் கிடக்கிறது என்றும், இரத்தம் கிடக்கிறது என்றும் எனக்குச் சொன்னார். நான் உடனே இருசக்கர வாகனத்தில் அங்கு சென்று பார்த்த போது, கருப்பையாவின் மனைவி, மகள் மற்றும் சித்தப்பா அங்கு இருந்தார்கள். அங்கு ரோட்டில் பைக் கிடந்தது. ரோட்டிற்கு தெற்குப்பக்கம் உள்ள வெட்டுத்தாவில் கருப்பையாவின் உடல் கிடந்தது. போலிஸ்க்கு தகவல் சொன்னீர்களா என்று கேட்டேன், சொல்லியாகிவிட்டது, யாரும் எதையும் தொடாதீர்கள் என்று சொன்னார்கள். கருப்பையாவை அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும் கருப்பையாவும் எனது வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் எந்த வண்டியில் சென்றோம் என்று போலிசாரிடம் சொல்லவில்லை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:41:51 +0530

என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் மது அருந்திவிட்டுதான் பைக் ஓட்டிச்சென்றோம் என்றால் சரிதான். என் தம்பி சௌந்தர்ராஜன் எனக்கு எந்த செல்போன் எண் மூலம் போன் செய்தார் என்று போலிசார் என்னை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் இறப்பு காரியத்திற்கு சென்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு என் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரியல்ல.

நாங்கள் கல்லிற்கு கொடுத்த அட்வான்ஸ் தொகை எவ்வளவு என்றும், எத்தனை கற்களுக்கு உரியது என்றும், போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். அவ்வாறு என் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரியல்ல.

நான் கேள்விபட்டு சென்று, பார்த்த பிரேதத்தில் எந்த நிற ஆடை அணிந்திருந்தார் என்று போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்களை போலிசாரிடம் சொல்லவில்லை என்றும், தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரணையில் "நாங்கள் கருப்பையா இறந்துகிடந்த இடத்திற்கு போகவில்லை" என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. என்னை அன்று முதல் மறுநாள் வரை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

மறு விசாரணை – இல்லை .

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:41:54 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .